DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

| | | |
|---|---|---|
| CC. / STC. / MC./ DVC. No | : | **DVC 08/2022** |
| Miscellaneous | : | - |

Deposition of **RW - 1 (Cross)**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஜானகிராமன் |
| Father's Name | : | திரு. திருவேங்கடம் |
| Village | : | பண்ணப்பட்டி |
| Taluk | : | காடையாம்பட்டி |
| Calling | : | கூலி |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27 March 2024. **துவக்க நேரம்** 11.15

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு உறுதிமொழி எடுக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) மனுதாரர் பிறவியிலேயே ஊனமுற்றவர் என்று அவருடைய மனுவில் கூறவில்லை என்றால் மனுதாரர் பிறவியிலேயே ஊனம் என்று நாங்கள் சொல்லவில்லை. திருமணத்திற்கு முன்பே அவர் ஊனமாத்தான் இருந்தார். மனுதாரரும், நானும் ஊனமுற்றவர் என்பதால் திருமணத்திற்கு முன்பே தெரிந்துதான் திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் சரிதான்.

2) மனுதாரர் திருமணத்திற்கு பிறகு குடும்ப பிரச்சனையில் கிணற்றில் குதித்து அவரே ஊனத்தை ஏற்படுத்திக்கொண்டதாக நான் எதிருரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிப்பிட்டுள்ளதற்கு எந்த ஆதராமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் திருமணத்திற்கு முன்பே அப்படி நடந்ததாகத்தான் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்வது கற்பனையானது என்றால் சரியல்ல.

3) மனுதாரர் திருமணத்திற்கு பின்னிட்டு காட்டிலிருந்து மாடுகளை பிடித்துவரும்பொழுது மாட்டின் கயிறு காலில் மாட்டி, தவறி 80 அடி கிணற்றில் விழுந்துவிட்டார் என்றால் அது பொய். அப்பொழுது மனுதாரருக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் எலும்பு முறிஏற்பட்டது உண்மைதான் மாட்டின் கயிறு மாட்டி

Typed by Karthi

அவர் கிணற்றில் விழவில்லை. மனுதாரர் அவர் அணிந்து வந்த நகைகள் அவருக்கு சிறுவயது முதலே அவருக்கு சேமித்து வைத்த நகைகள் என்றால் இல்லை அவர் நகையே போட்டுவரவில்லை. திருமணத்தின்பொழுது எனக்கு அரை பவுன் மோதிரமும், 17 பவுன் நகை மனுதாரருக்கும் மனுதாரரின் பெற்றோர் சீர்வரிசையாக கொடுத்தார்கள் என்றால் பொய். திருமணத்தின்பொழுது நான்தான் 1 லட்சம் பணம் கொடுத்துதான் திருமணம் செய்து வந்தேன்.

4) திருமணத்தின்பொழுது மனுதாரரின் பெற்றோர் எனக்கு 1 லட்சம் பெட்டி பணம் கொடுத்தார்கள் என்றால் இல்லை. வீட்டிற்கு தேவையான வீட்டு உபயோக பொருட்கள் கொடுத்தார்கள் என்றால் இல்லை. நான் என்னுடைய வாக்குமூலத்தில் யாரிடம் எந்த தேதியில், எவ்வளவு வட்டிக்கு ரூ 1,00,000/- பணம் வாங்கி மனுதாரர் குடுத்தாருக்கு கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. முருகன், சீனிவாசன் ஆகியோர்களின் பெயர்கள் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன்.

5) வட்டியையும், அசலலையும் சேர்த்து மொத்தம் 2 லட்சத்தை நெருங்கிவிட்டதாக நான் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்றால் இருக்கிறது. வாங்கிக்கொடுத்தவர்களே இருக்கிறார்கள். நானும், எனது பெற்றோர்களும் மனுதாரரை 2 நாட்கள் வெளியில் படுக்க வைத்துள்ளோம் என்றால் இல்லை.

6) மனுதாரருடன் நான் வாழ முடியாது என்று தகராறு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானே அப்படித்தான் உள்ளேன் நான் எப்படி அவரை போய் செல்வேன். கடந்த 2019 ல் கார்த்திகை மாதம் 5 ம் தேதி மனுதாரரை அழைத்துச்சென்று அவரது பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு வந்துவிட்டேன் என்றால் நான் மனுதாரரை மேற்படி தேதியில் அவரது பெற்றோர் வீட்டிற்கு அழைத்துச்சென்றது உண்மைதான் மீண்டும் வா என்று அழைத்தேன் அவரது பெற்றோர்கள் விடவில்லை. அதனால் தனியாக வந்துவிட்டேன்.

7) 2019 ல் கார்த்திகை மாதம் 15 ம் தேதி பஞ்சாயத்தார்களை நான் அழைத்துச்சென்ற மனுதாரை அழைத்து வந்தேன் என்றால் ஆமாம். அவர்கள் பஞ்சாயத்தார்களை அழைத்து வரச்சொன்னதால் நான் அழைத்துச்சென்றேன். 2019 ம் வருடம், மார்கழி மாதம், 10 ம் தேதி நானும், எனது பெற்றோர்களும் ஒன்று சேர்ந்துக்கொண்டு மனுதாரரை எங்கள் வீட்டின் சாமி அறை மற்றும் சமையல் அறைக்கு உள்ளே விடாமல் தடுத்துவிட்டோம் என்றால் பொய். மனுதாரர் போகவில்லை.

8) மனுதாரரை வீட்டிற்கு வெளியில் வைத்து, சாப்பிடுவதற்கு பழைய தட்டு மற்றும் பழைய துணி, மணிகளை தந்து அதிலேயே சாப்பிட்டுவிட்டும், அந்த துணிகளையே பயன்படுத்திக்கொண்டும் கொடுமைப்படுத்தியுள்ளோம் என்றால் பொய்.

தனி வீடு உள்ளது அதில்தான் மனுதார் சமைத்து சாப்பிட்டுக்கொண்டு இருந்தார். ஒரு இந்து கணவன் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமைகளில் இருந்தும், பொறுப்புகளில் இருந்தும் நான் தவறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை -** இல்லை

முடிவு நேரம் 11.32

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

Sd/-S. Munusamy Bsc., B.L.,
Judicial Magistrate No.1,
Attur.

Typed by Karthi